முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 28.01.2026 அ.வ.எண். 87/2021 வா.சா.1.பிரேம்குமார் த/பெ.மாதவன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எனக்கு வா.சா.ஆ.1ன் படி பாத்தியப்பட்ட கிரயப்பத்திர சொத்தின்பேரில் பிரதிவாதி வங்கியில் 17.11.2000 ம் தேதியில் அடமானம் வைத்து அதன்பேரில் கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் கடந்த 21.09.2007 தேதியிட்ட ரசீதுப்படி கடன் தொகை முழுவதையும் செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு 09.08.2007 தேதியன்று வா.சா.ஆ.1 வங்கியை இடமாற்றம் செய்யும்பொழுது காணாமல் போய் விட்டதாக கூறி எனக்கு ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதி அது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் அசல்பத்திரம் கிடைத்தால் திருப்பி கொடுப்பதாக எவ்வித சங்கதிகளும் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உறுதிமொழி பத்திரம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தில் கூறியுள்ள பத்திரங்கள் கிடைத்தவுடன் தருவதாக எவ்வித சங்கதிகளும் இல்லாத நிலையில் எனது தாவாவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் கூடிய விரைவில் பத்திரங்களை திருப்பிதருவதாக வா.சா.ஆ.4 ல் கண்டுள்ளதாக கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எழுதிய பின்பு அசல் பத்திரத்தை திரும்ப வேண்டுமென்று எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 09.08.2007 தேதியிலிருந்து வா.சா.ஆ.5 அறிவிப்பு 08.08.2017 அனுப்பும்வரை பிரதிவாதிகளுக்கு எவ்வித சட்ட நடவடிக்கையும் நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எழுதியதிற்கு பின்னிட்டு 10 ஆண்டுகள் கழித்து தான் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.4 ஏற்பட்டட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் தாவா தாக்கல் செய்யாமல் பத்து ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ள இந்த தாவா கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலவரையறைக்குள் இந்த தாவா தாக்கல் செய்யாததால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு எவ்வித வியாஜ்ஜியமும் இல்லை வியாஜ்ஜியமூலம் தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்மென்றால் சரியல்ல.

(ஒப்பம்)/-R.சுஜாதா

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி.